**இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் - 2023**

-------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயல்வழி கையேட்டில் 6.2 ஆம் பந்தி | நிதி அமைச்சரின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டில் ரூபா 39 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1995 இல் 37 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் (திருத்தப்பட்ட) | அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய நிர்வாக சபையின் அங்கத்தவர்களில் கல்வி, நிதி, சட்டம் மற்றும் நிர்வாகத் துறைகளில் | புதிதாக நியமிக்கப்பட உள்ள கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்களின் உள்ளடக்கத்தில் அதிகாரச் சட்டத்தின் | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 15ஆம் பிரிவின் (VI) ஆம் பந்தி | விசேட சேவையாற்றிய நபர்களாக காணப்பட வேண்டிய போதிலும் தற்போதைய கட்டுப்பாட்டு சபைக்கு நிதித்துறையின் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காது சட்டத்துறையின் இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் அங்கத்தவர்களை நியமித்தல் தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,519,743 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 53,362,146 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 55,881,889 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் செலவினங்களுக்கான அரச மானியங்கள் ரூபா 18,105,000 இனால் மற்றும் வெளிவாரி செயற்திட்ட வருமானம் ரூபா 36,788,598 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்தில் ரூபா 567.4 மில்லியனான ஒட்டு மொத்த வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 651.9 மில்லியன் வரையிலும் 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தில் ஈட்டப்பட்ட வருமானம் முறையே ரூபா 84.65 மில்லியன் மற்றும் ரூபா 136.98 மில்லியன் ஆனமையால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஈட்டப்பட்ட வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 52.33 மில்லியனால் அல்லது 61.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த செலவினம் முறையே ரூபா 534.81 மில்லியன் மற்றும் ரூபா 560.19 மில்லியன் ஆனமையால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 4.75 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் ஆகியவை முறையே 1.1:1 மற்றும் 1.04:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதம் முறையே 0.6:1 மற்றும் 0.54:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகத்திலன குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 200 வெளிநாட்டு மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக ரூபா 190,135,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய (வரி நீங்கலான) விடுதி கட்டிடத்தினை நிர்மாணிக்கம் செயற்திட்டத்தின் இரு சந்தர்ப்பங்களில் திகதிகள் நீடிக்கப்பட்ட பின்னர் 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி நிறைவு | வெளிநாட்டு மாணவர்களின் விடுதி கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டவாறு உள்ளதுடன், ஒப்பந்த கையளிப்பு 2024 ஜூலை இறுதி வாரத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | இந்த கட்டிடத்தினை நிர்மாணிக்கும் பணிகளை நிறைவு செய்வதற்கு உரிய பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2022 மே மாதம் அளவில் அந்த கட்டிடத்திற்காக ரூபா 148,336,250 செலவிடப்பட்டு பௌதீக செயல் முன்னேற்றம் 75 சதவீதம் அளவில் காணப்பட்டபோது நிர்மாண பணிகள் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | வெளிவாரி பரீட்சை அலகொன்றிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து மாடி கட்டிடத்தின் நிர்மாண பணிகள் ஒப்பந்ததாரரால் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் 2022 ஜூலை 01 ஆம் திகதி உடன்படிக்கையை நிறைவு செய்ய கட்டுப்பாட்டு சபை தீர்மானித்திருந்தது. இந்தப் பணிக்காக ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப செலவினங்களுக்கு உரிய பட்டியல்களில் கட்டிடத் திணைக்களம் மற்றும் பணிப் பொறியியலாளரால் சான்று படுத்தப்பட்டிருந்த பணிகளின் பெறுமதி ரூபா 11,725,461 மாத்திரம் ஆனமையால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 14,508,834 முற்பணத் தொகையில் ரூபா 2,783,373 தொகையினை உள்ளடக்க முடியாது இருந்தது. மேலும் ரூபா 12,616,373 தொகையான செயலாற்றல் பிணைமுறி காலாவதியடைவதற்கு முன்னர் காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் ரூபா 15,399,746 தொகையான நிதி நட்டமொன்று பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக சுற்றுலாத்துறை மட்டுப்படுத்தப்பட்டமையால் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய ஒவ்வொரு நிறுவனங்களின் மூலம் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கும் தாமதமாகியதுடன் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்ட பின்னர் கட்டிடங்களை நிர்மானித்தல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அரசாங்கத்தினால் நிதியேற்பாடு வழங்கப்படுதல் நிறுத்தப்பட்ட காரணத்தால் நிர்மாணப் பணிகளை நிறைவேற்ற முடியாது இருந்தது. எவ்வாறான போதிலும் அந்த கட்டிடத்தின் நிர்மாண பணிகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் அதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | உத்தேச கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியதுடன் முற்பண பிணைமுறி முதிர்வடைவதற்கு முன்னர் காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரை இனம் காணுவதற்கு மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டுடன் இணைந்த நிறுவன அபிவிருத்திக்கு இரு ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு நபர் மாத்திரம் நியமிக்கப்பட்டு இருந்ததுடன் தூதரகத்தின் மூலம் பல்கலைக்கழகம் தொடர்பில் விளம்பரப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய வெளிநாட்டு மாணவர்களின் பதிவில் அதிகரிப்பு ஒன்றினை காண முடியாது இருந்தது. | ஒட்டுமொத்தமாக உள்நாட்டு பல்கலைக்கழக கட்டமைப்பினுள் வெளிநாட்டு மாணவர்கள் தொடரும் பாட நெறிகளின் எண்ணிக்கையில் குறிப்பிட்ட அளவிலான வீழ்ச்சி ஒன்றினை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு உலகளாவிய ரீதியில் இடம் பெற்ற நிலைமைகள், பொருளாதார இடர் மிகுந்த நிலைமைகள் இதன் போது கருத்தில் கொள்ளப்பட்டது என்பது. | செயல் நடவடிக்கை திட்டத்தில் காணப்படும் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் 2023-2027 ஒருங்கிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்காக 200 உள்நாட்டு மாணவர்களுக்கு மற்றும் 100 வெளிநாட்டு மாணவர்களையும் இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 153 உள்நாட்டு மாணவர்கள் மற்றும் 14 வெளிநாட்டு மாணவர்கள் எனுமாறு 167 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறை தாமதமடைந்தமையால் உள்நாட்டு (பாமரர்/துறவி) விண்ணப்பதாரர்கள் 153 பேருக்கு மாத்திரம் ஆட்சேர்க்க முடியுமானதாக இருந்தது | கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |